# மனுசாஸ்திரியும் மலான் சாஸ்திரியும்

## பிறப்பினால் பேதப்படுத்தினார் மனு!

## நிறத்தினால் சிறப்புத்தேடுகிறார் மலான்!

## விரிவிலா நெஞ்சினர்—எரிகண்கொண்டோர்!

### மனுவும்—மலானும் மிருக சுபாவம் கொண்டவர்களே!

மலான் தென் ஆப்ரிக்காவின் பிரதமர். வெள்ளை நிறத்திமிரின் காவலர். விரிவிலா நெஞ்சினர். எரிக்கண்ணர். நிறம்காரணமாக, மக்கள் கூட்டத்தை, பேதப்படுத்தி—பிளவுபடுத்தி—இழித்துரைக்கும் வெள்ளை வெறியர். அனைவரும் ஒன்று என்று எண்ணும் பெருநெறியை எதிர்த்துப் போரிடும் புல்லர்.

அவரும் ஏசுவின் அன்பு சமயத்தவர் என்று சொல்லப்படுகிறது. இயேசுநாதர் மீண்டும் உயிர்பெற்று எழுந்து வந்தால், அவரை மறுமுறையும் சிலுவையில் அறைந்து கொல்லும், கொலையினும்கொடியவர் மலான்! இயேசுவின் பெயர் கூற மலான் வெட்கப்படவில்லையே!

கல்லறைக்கண்டனமும், ஏட்டின் எச்சரிக்கையும், என்ன செய்துவிடும் என்ற இறுமாப்பிலே, இருந்துவருகிறார் மலான். மானுஷீகத்தை மதிக்க மறுக்கிறார் சமநீதியின் சத்துருவாகக் காட்சியளிக்கிறார். சமரச ஞானத்திற்குப் பிறவிப் பகைவராக இருக்கிறார்.

ஐக்யநாடு சபை இருக்கிறது, உலக மக்களின் பிறப்புரிமைகளைக் காப்பாற்றித்தர. சொற்கள் அலங்காரமாக இருக்கின்றன. பொருள் நிரம்பி இருக்கிறது. பலன்தான் பூஜ்யம். திட்டத்தை நிறைவேற்றும் நினைப்பைக்காணோம்!

ஒரு நாட்டில், அந்த நாட்டில் வாழும் மக்களுக்கு, ஆளவந்தார்களால் இழைக்கப்படும் அநீதிகண்டு, ஐக்யநாடுசபையில், சமரசகீதம், சஞ்சல வார்த்தை, சலிப்புப்பேச்சு கொதிக்கும் சொல், முகாரிராகம் போன்ற பலப் பல குரல்கள் கிளம்பிக் கொண்டுதான் இருக்கின்றன. நாடு நகரமெல்லாம் தெரிந்துகொள்ளும் அளவில்தான், அவைகள் விளம்பரப் படுத்தப் படுகின்றன. நடைமுறையில், மக்களின் சாதாரண உரிமைகளையும் வழங்க மறுக்கும், கொடியவர்களின் கொட்டம் குறைந்த பாட்டைக் காணோம். கண்டனம் கிளம்பக் கிளம்ப, அந்த புத்தி படைத்தக் கொடுங்கோலர்களின் கொடுமையும் கூடுதலாகிக்கொண்டு வருவதைப் பார்த்து வருகிறோம்.

உள்நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளில் ஐக்கியநாடு சபைத் தலையிடக்கூடாது என்ற விதியை எடுத்துக் காட்டி, வஞ்சகர்கள், சொந்த நாட்டில் மேற்கொண்டு ஒழுகும், அக்கிரமச் செயல்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுகிறார்கள். ஐக்கியநாடு சபையும் பெட்டிப் பாம்பாகிறது. வெறும்விளம்பரச் சாவடி. வெறும் கவைக்குதவாதப்பேச்சு மேடை. டாலர் நாட்டின் உள் நோக்கத்தைமறைத்துக் கொள்ள உருவாக்கப்பட்ட, ஒழுக்கமற்ற அரசியல் அங்காடி!

இருபதாம் நூற்றாண்டில், நிறத்தைக் காரணம் காட்டி, மலான் மனிதச் சமுகத்திற்குத் தீங்கிழைக்கிறார். த[illegible]க் கேட்டால் திமிர்வாதம் பே[illegible]கிறார். மனிதப் பண்பை சீர்குலைக்கிறார். இது அநீதியல்லவா என்று ஐக்கியநாடு சபை கேட்டால், 'உனக்கேது அதிகாரம் என் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட' என்று பதட்டமாகப் பேசுகிறார். ஐக்கியநாடு சபை விழிக்கிறது, வாய் செத்தப் பூச்சிகள் வல்லூறுகளுக்கு இரையாவதைப் பார்த்துக்கொண்டே.

வெண்மை-தூய்மையின் இருப்பிடம் என்றுசொல்லுவது மாபு. மலான்தோலின் வெண்மை நிறம், வஞ்சகத்தை மறைக்கும் ஒரு கூடாக இருக்கிறது. கருப்பரைக் கண்டால் காய்கிறார், மலான். இந்தியர்களைத் தொழுநோய்கொண்டவர்களை போலத் தீர்மானித்து, வெள்ளை நிறத்தவரோடு உறவாடுவதை, சேர்ந்து வாழ்வதை, கூடிக்குலாவுவதைத் தடுக்க முனைகிறார் தகுதியற்றச் சட்டங்களால், மலான்!

ஐரோப்பிய கலாசாரம்கெட்டுவிடுமாம், வெள்ளையர் மற்ற நிறத்தவரோடு ஒன்றுபட்டுவாழ்ந்தால். மனிதனை மனிதனாக மதித்து, அன்பு காட்டுவதை அழிப்பதுதான் ஐரோப்பிய பண்பாடோ? 'ஆம்!' என்கிறாரே மலான்! அநீதி-அக்கிரமம் இது.

வெள்ளையர்களே தென் ஆப்ரிக்காவைச்சுரண்டி வாழவேண்டும் என்று, என்றோ மலான் பாரம்பரைப் போட்டிருந்த திட்டம் ஆட்டங்கொடுக்க ஆரம்பித்து அதிகாள் ஆகிவிட்டன. வெறுங்கூலிகளாகச் சென்றவர்கள், சொத்து சேர்க்கவும், மாடமாளிகை வாங்கவும்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (9—9—49) வெளியூர் (10—9—49) [ இதழ் 31

# தேவலீலைகளுக்குமா தடை?

## புராணப் புத்தகங்களுக்கும் தடை ஏற்படுமா?

கடவுளின் உருவங்கள் எனப்பட்ட வற்றைச் சினிமாபடங்களில் ஆபாசமான முறையில் காட்டப்பட்டால் அது பற்றிய தகவலை உடனே மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட நீதிபதிகளுக்கு அறிவிக்க வேண்டுமென ஐ. மா. அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

சென்னையிலும் இது போன்ற முயற்சி நடந்தது.

ஆபாசமான முறை என்றால் இன்னது என்பதை விளக்கவில்லை. எனினும், பரமசிவம் மடிமீதும் தலைமீதும் இரு பெண்களை வைத்திருப்பதாகக் காட்டுவது ஆபாசமாயிருக்கலாம்.

கிருஷ்ணபாமாத்மா ஜலக்கிரீடை, ராதை கண்ணை மூடிவிட்டு ருக்மணியை முத்தமிடுவது போன்றவை ஆபாசமாகக் கருதப்படலாம்

கணபதி தொந்திசரிய தும்பிக்கை ஆட பெருச்சாளி முன்னோட நகர்வலம்வருவது ஆபாசக்காட்சியாயிருக்கலாம்.

சுப்பிரமணியசாமி இருதொடைகள்மீதும் இரு பெண்களை அமர்த்திவைத்துக்கொண்டிருப்பது ஆபாசக் காட்சியாகக் கருதப்படலாம்.

கண்ணபிரான் சத்தியபாமா வீட்டில் படும் அவதி ஆபாசக்காட்சியாயிருக்கலாம்.

பரமசிவன் தாருகாவனத்தில் பிச்சைக்குப் போக, ரிஷிபத்தினிகள் ஆடை நெகிழ அவரைப் பின்தொடர்ந்து சென்றது ஆபாசக் காட்சியாயிருக்கலாம்,

இவையனைத்தும் இன்னும்இவை போன்ற ஆயிரக்கணக்கானவை புராணங்களில் உள்ளவையல்லவா என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றும். புராணங்களில் வெளியே கூறவும் நாகூசுமாறுள்ளவை பல. அவற்றைப் படிக்கலாம் பக்திப் பரவசத்தோடு. கோயில் கோபுரங்களிலே இந்தக் காட்சிகள் சிலாரூபங்களாக அழகிய பல வண்ணப் பூச்சுகளுடன் கண்ணைப் பறிக்கும் வண்ணம், பக்தர்கள் பார்த்தவுடன் கண்ணுக்குத் தெரிந்து மனத்தைப் பரவசப் படுத்தும் வகையில் வைத்திருக்கலாம். ஆனால் சினிமா நாடகம் முதலியவற்றில் அவற்றைக் காட்டுவது கூடாதுதான். புத்தகங்களில் அவை ஆபாசமானவை என்று எழுதுவதும் குற்றந்தான். அவை பக்தி மார்க்கம். சினிமாவில் காட்டுவது கண்டித்து நூல்கள் எழுதுவது—இவை "உட்கருத்து, அதனாலேற்படும் பலன்" என்பவற்றிலிருந்து பார்க்கப்போனால் குற்றமாகும். எனவே, மதத்தின் பெயரால், பக்தியின் பெயரால் எந்த ஆபாசமும் நடை பெறலாம்; படம் எழுதலாம்; சிலையாக வைக்கலாம்; பார்த்து மகிழலாம். ஆனால் அந்த 2 பெயர்களுமில்லாத வேறு வகைகளில் அவற்றை எடுத்துக் காட்டுவதுகுற்றம். இதுதான் அரசாங்கத்தின் கருத்துப்போலும்!

## 20-ம் நூற்றாண்டில் "10-ஆம் பசலி"

### அ. நி. சபை அங்கத்தினர்தான்!

அ. நி. சபையில் 10-ஆம் பசலிப் பேர்வழிகள் பலர் உளர்; அங்கு நடைபெறுவதென்னவென்றறியாமல் கைதூக்கும் போவழிகளும் பலருளர். அதில் ஒரு10-ஆம் பசலி, பீகாரைச் சேர்ந்த ராஜேஸ்வர் பிரசாத், ஓர் அருமையான கருத்தை அ. நி. சபையில் வெளியிட்டுத் தம் கட்சிக்கு வேறு ஆட்களில்லையே என்று வருநதுகிறார். அதாவது "இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி முறையே கூடாது; எல்லா அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தாரிடமே இருத்தல் வேண்டும்" என்பதே அவருடைய அவா.

பல சாதி-மதங்கள்நிறைந்த இந்நாட்டுக்கு மாகாணச் சுயாட்சியேகூடாதென்று காரணங் காட்டுகிறார் அத்தோழர். சர்வாதிகாரப்பிரியர்களும், நடைபெறுவதென்னவென்பதை அறிந்துகொள்ள முடியாதவர்களும் இவருக்குத் தோழர்கள் தாம் என்பதை இவர் அறியார் போலும்! ஆனால் அதிகாரங்கள் அனைத்தையும் மத்திய அரசாங்கத்தாரிடம் அளித்து, அரசவம்ச ரத்தம் ஓடுகிற ஒருவரைப் பரிசோதித்துப் பிடித்து வந்து மன்னராக்கிவிட வேணும் என்னும் ஒரு திருத்தம் செய்து, தோழர் ராஜேஸ்வர் பிரசாத் ஒரு தீர்மானம் கொணர்ந்தால் ஒருவேளை அதற்குப் பெருவாரியான ஆதரவு கிடைத்துவிடுவதிலும் வியப்பொன்றுமில்லை!

## ஐந்தாவது கம்பர் மாநாடு!

ஐந்தாவது கம்பர் மாநாடு "ராஜாஜி ஹாலில்" நடைபெறப்போகிறதாம். நவம்பர் 5, 6, தேதிகளில் கூடுமாம்! ஏன் அவ்வளவு நாட்கள் தள்ளி நடைபெறப் போகிறது என்று கேட்கிறீர்களா, "ராஜாஜி ஹால்" 'ரிப்பேரில்' இருக்கிறதாம்! ஹால் ரிப்பேர், கம்பராமாயண ரிப்பேர் இரண்டையும் ஒரே சமயத்தில் வைத்துக்கொள்வது கஷ்டமல்லவா? ஆகையினால்தான் 'ஹால்'ரிப்பேரை முடித்துக்கொண்டு, ராமாயண ரிப்பேருக்கு வருகிறார்கள்! இந்த ஆண்டில் 'ரசிகமணி' டி. கே. சியார் என்ன என்ன ஒட்டை உடைசசல்களைக் கம்பராமாயணத்தில்க் ('க்' டி. கே. சி. இலக்கணப்படி) காட்டப்போகிறாரோ, தெரியவில்லை!

"ராஜாஜி ஹாலைத்" தவிர வேறு எங்கேனும் கூட்ட முடியாதோ, என்று கேட்கலாம்! அது எப்படினு முடியும்! வேறு எங்கேனும் கூட்டினு, பலரும் வருவர், கேள்விகள் கேட்பர், பிறகு திக்குமுக்காடிப் போகவேண்டி வரும்! "ராஜாஜி ஹாலிலே" கூட்டினால்தான், பிரதமர், மற்ற மந்திரிகள் எல்லாம் வருவா, போலீஸ், சைன்யம் உள்பட தூரகபதாதிகள்வருவா, வந்தாலிகசிகாமணிகளெல்லாம் ரசுிப்பா இது தெரியவில்லையோ!

கம்பராமாயண மாநாட்டிலே முசிரி சுப்பிரமணிய அய்யர்வாள், வி. வி. சடகோப அய்யங்கார்வாள், களக்காடு நாமநாராயண அய்யர்வாள் ஆகியவா, பாடப்போறு, வேறு என்னங்காணும் வேண்டும் விசேஷம்!

# மாலை மணி

சென்னை 9—9—49 வெள்ளிக்கிழமை


# அன்று உணர்த்தினேம் இன்று உணர்கிறார்கள்

'குட்டுப் படும்போதுதான் குணம் தெரியும்' என்பது பழமொழி. அவரவர் தலையில குட்டுப்பட்டு, உறைககும்போதுதான், அதன் தன்மை நன்ருகப் புரியும். சாதாரணமானவர்களுககு முதலிலே புரிந்துவிடும்; சில தடித்த தோலர்களுக்குப் பல குட்டுகள் விழுந்த பிறகு தான உறைககும. இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களாக அரசியல் உலகிலே காட்சி அளிப்பவர்கள்தாம் காங்கிரஸ்காரர்கள்.

காஙகிரஸ்காரர்களிலே, மந்திரிகள் கொஞ்சம் சிலாக்கியமானவர்களல்லவா! அவர்களுககு உறைக்கும் அளவுக்கு இப்பொழுது, தாககுதலின் மேல் தாககுதல், பொதுவாக மத்திய அரசாங்கத்திடததிருந்தும், குறிப்பாக வட இந்திய வாலாக்களிடத்திருநதும், அவர்கள தலையில் விழுந்த வண்ணம இருக்கின்றன. அதனகாரணமாக, மந்திரிகள், ஆஙகாங்கு புலம்பியழுது வருகிருர்கள். அந்த புலமபுதலிலே, சில சமயங்களில் உணமை கலந்து உள்ளுணர்ச்சியும் கலந்து வந்துவிடுகிறது.

மைலாபபூரில், இந்துஸ்தானி வகுபபுகளைத துவக்கி வைக்கும் விழாவொன்றில் பேசும்போது. சென்னை மந்திரி சஞ்சீவியார், சில மொழிந்துள்ளார், வட நாட்டவர்தாக்குதலின் வேதனை தாங்க முடியாமல்.

**"தென் இந்தியர்கள்மீது, இந்தி எண்களைப் புகுத்த வட இந்தியர்கள் முயற்சிப்பது, அவர்கள்பால் அழகுடைய தன்மையாகாது. அப்படிப்பட்ட விஷயங்கள், தென் இந்தியர்கள் மீது வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படுமேயானல், தென் இந்தியர்கள் வேதனைப்பட்டு, அவற்றை வெறுக்கத் தலைப்பட நேரிடும் என்ற உண்மையை அவர்கள் உணரவேண்டும்."**

என்று மந்திரியார் கூறுகிருர். கூறுவது மட்டுமலல, உணர்கிருர். உணர்வது மட்டுமலலாமல, வடநாட்டவருக்கு எச்சரிக்கையும் செய்கிருர்.

வடநாட்டு இந்தி வெறியர்கள், இந்தி எண்களைத் தென்னுட்டு மக்கள் மீது திணிகக விரும்புகிருர்கள்; அதுவும் வலுக்கட்டாயமாகப் புகுத்த ஆசைப்படுகிருர்கள்; தென்னுட்டவர்க்கு அதுவிருப்பநதரவில்லை எனபதைத் தெரிந்தும் புகுத்த முயற்சிக்கிருர்கள்; தாங்கள் எழுததுக் கலாசாரத்தை எப்படியேனும் புகுத்திவிடவேமுனைகிருர்கள்; என்று தெளிவாகத் தெரியம் நிலை ஏற்படும் போதுதான், குட்டுஉறைக்கிறது, மநதிரிசஞ்சீவியார் போன்றவர்களுக்கு.

இந்தி எணகள தேவையிலலை, அகில உலக எணகளே போதும், அகில உலக எண்களை வைத்துக்கொணடே இந்தியாவிலுள்ள பல்வேறு மொழியினரும் காலந்தள்ள முடியும், எவற உணாவு, இப்பொழுது தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்கள் பலருக்கு ஏற்படிருக்கிறது. எண்பிரச்சினை வருமபோது, காங்கிரஸ்காரர்கள், வட நாடு - தென்னுடு என்று பிரிகின்றனர்-பிரிநது நிற்கின்றனர்- பிரித்துக்காட்டுகின்றனர்.

இந்தி எணகளைப் புகுத்த வட நாட்டுககாரர்கள் எடுத்துக்கொள்ளுமம முயறசி, அவர்களுடைய கலாசாரத்தைத் தென்னுட்டின் மீதுபுகுத்தவேயாகுமஎன்பதும, அவர்களது வெறியுணாச்சி எவ்வளவு நிலை கடந்து நிறகிறது என்பதும இப்பொழுதுதான புலப்படுகினறன இவர்களுககு! ஆகவேதான, தோழா சஞ்சீவியார், தென்னுட்டு மக்களின் மனப்பான்மை வடநாட்டவா முன் எடுத்து வைக்க முறபடுகிருர். இந்த நிலையை நமமால முனபே உணர முடிநதது, எனவேதான், அப்போதுமுதற கொண்டு, தென்னுட்டவரின் உள்ளககிடக்கையை எடுத்து முன்வைகக நமமால் இயனறது. ஆகவேதான் இந்திமொழி ஏகாதிபத்தியம் எநத உருவிலுமகூடாது, தேவையிலலை என்று கூறிவந்தோம்—இன்றுமகூறிவருகிருேம்.

தோழர் சஞ்சீவியார், வடநாட்டவருக்குக் கொஞ்சம் அச்சங் கொடுக்கும் எனறு கருதி, மேலுமஒரு எச்சரிக்கை விடுகிருர், அதே விழாவில் நின்றுகொண்டு.

**"அவர்கள் மீது (தென்னுட்டவர் மீது) வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும்எதுவும் மறுக்கப்பட்டே தீரும். அது தென்னிந்தியாவிலுள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களுக்கு வலுவூட்டுவதாகத்தான் முடியும். மேலும் திராவிடஸ்தான் இயக்கம் போன்ற பிரிவினை இயக்கத்திற்கு வலுவூட்டுவதாகவும் முடியும்."**

என்று கூறுகிருர். வடநாட்டவரின்எதேச்சாதிகாரம், திராவிடஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சிக்கு வலிவு கொடுத்துவிடும் என்கிருர். திராவிடஸ்தான் பிரிவினை, வடநாட்டவரின் எதேச்சாதிகாரவளர்ச்சியில் இருக்கிறது என்பதை இப்பொழுதாவது உணர்ந்தாரே மந்திரியார், அதுவரையில் மகிழ்ச்சிதான்! திராவிடஸ்தான பிரிவினைககிளாசசி வடநாட்டு எதேச்சதிகாரத்தின் வளாகககூடியது எனறும் யாரே கூறுவதிலிருநது, அந்தப் பிரிவினைககு அர்த்தமிருகிறது, அது ஏதோ வொரு காரணம் பற்றித்தான் வளாந்து இருக்கிறது, அது வளாவதறகான தொடர்ச்சிக் காரணம வடநாட்டுச் சதிகாரார் தான என்பதை உணர்நது கொண்டுள்ளார்என்பது புலபபடுகின்றது.

வடநாட்டோடு, தென்னுடு சேர்ந்து வாழ இயலாது, கூடாது என்பது கூட அல்ல; இயலவே இல்லை என்பதை, வரலாறு, பண்பாடு, நாகரிகம் கலை, மொழி ஆகியவற்றை அடிப்படையாகக கொண்டு நாம கூறும் போது, தோழர் சஞ்சீவியார் போன்றவர்களுக்குப்புரியவில்லை. இப்பொழுது நிலைமை அவர்களுககுப்புரியக கூடிய விதத்தில் வளர்நதுளளது; எனவேதான் சிறிதளவாவது புரிந்துகொணடு, காரணத்தைக கண்டுபிடிக்க முயன்றுள்ளார். எனவேதான, **திராவிடஸ்தான் பிரிவினைக்கு வடநாட்டு எதேச்சதிகாரம் காரணமாகும்;** அது வளாதல் பிரிவினைக கிளாசசிக்குத் தூணடுதலாகும், எனறும் பொருளபடக் கூறியுளளார்.

இனிமேல்தான் அது தூண்டுமா என்றல்லவா கூறுகிருர் மநதிரியார்; அந்தக் கிளாசசியின அடிப்படைக காரணமே அந்த வடநாட்டு எதேச்சாதிகார-ஆதிக்க மனப்பானமைதான என்பதை மநதிரியாருககு இச்சந்தர்பபத்தில கூற விருமபுகிருேம. போகப்போக அதன் உணமையை அவர் உணரக்கூடும், என்பதில் ஐயமில்லை.

இப்போது ஏறபட்டுள்ள எண பற்றிய எதேச்சாதிகார வெறி, தெனனுட்டவரினமீது பாய்ந்து, தெனனுட்டுக் கலாசாரத்தை அழிககாமல் பாதுகாக்க, **தென்னுட்டவரின் சார்பாக வாதாட பண்டித நேரு அங்கு இருக்கிருர்** எனறு சொலலி ஆறுதல் பெறுகிருர் மந்திரியார். ஆகவே தெனனுட்டவர் பண்டித நேருவின் தயவை நாடியே எத்தனை ஆண்டுகள் வாழ வேண்டுமெனறு சஞ்சீவியார் எணணுகிருர்? எத்தனை ஆண்டுகள அவர் ஆதரவு கிடைககும எனறு கருதுகிருர்? அவருடைய காலத்திற்குப் பிறகு யார் தயவை நாடுவது? வடநாட்டவரின வெறியை அடக்கித் தென்னுட்டவர்கள் சார்பாகப் பேசப் பண்டித நேருககுப் பின்னும ஆட்கள் வடநாட்டிலே கிடைத்துக் கொணடே இருப்பார்கள் என்று நினைக்கிருரா? ஏன தென்னுட்டவரின உள்ளககிடக்கையை மாய்த்துவிட்டு வடநாட்டவரின் தயவிலே வாழச் சொல்லுகிருர்?

வடநாட்டவர் தங்கள் கலாசாரத்தையும், மொழியையும தென்னுட்டின்மீது புகுததமுயலுகின்றனர். அதனைவிட வளமுள்ள, வலிவுள்ள தென்னுட்டுக்கலாச்சாரமும், மொழியும் அவற்றைத் தடை செய்கின்றன. அன்பினுல், அவற்றை, அவர்களால்புகுத்த முடியவில்லை; எனவே இப்பொழுது அதிகாரத்தின துணை கொணடு அவைகளைப் புகுததப் பார்க்கின்றனர். இந்தச் சூட்சமத்தைத் திராவிடர் கழகத்தவரால் உணர முடிகிறது; தேசியத் தோழர்களால் உணர முடிவதில்லை. உணர்ந்த திராவிடர் கழகததவர்தான் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களாகி, திராவிடநாட்டுப்பிரிவினைக் கிளர்ச்சிக்காரர்களாக மாறி இருக்கிருர்கள். தென்னுட்டுத் தேசியத் தோழர்கள் இப்பொழுது இந்தி எண் கிளர்ச்சிக்காரர்களாக மாறியிருக்கிருர்கள், எங்கு வந்து சேர்வார்கள்—எங்கு வந்து சேரவேண்டும்—எங்கு வநது சேரமுடியும்? எங்கு? "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற பிரிவினை முழக்கத்தில்தான்! ஐயம், ஏன்?

## இசை இன்பமூட்டாத நேரம்

### தூக்கத்திற்குத் தொல்லைதரும் தோழர்கள்

இரவு 10-மணிக்குமேல் உறககத்திற்குரிய நேரத்தில் ஒலிபரப்பி மூலம் கிராமபோன பாடடுகளை ஒலி பெருக்கி, அதனுல் மக்கள் தூக்கஙகெட்டுத் தொல்லைக்குளளாகுமாறு செய்தல் கூடாதென்று லூதியானு (பஞ்சாப்) நீதிபதி தடையுததரவு பிறப்பித்திருக்கிருர்.

சென்னையிலும் பிற நகரங்களிலும் இத்தொல்லை பெரிதாயிருக்கிறது. சிலர் இரவு 10-மணிக்குமேல் இசைஇனபமூட்டமுடியா நேரத்தில் கதாகாலட்சேபங்களும் கச்சேரிகளும் வைத்துக்கொண்டு தெருக்களிலும் ஆள்போக்குவரதது, வண்டி போக்குவரத்து முதலியவற்றுககுப் பெருநதடையாக இருப்பதுடன் அவற்றை ஒலிபெருக்கிகள் மூலம் நெடுந்தொலை கேட்கக் கூடியவாறு பரப்பி, தூங்குவோருக்குப் பெருந்தொல்லையாயிருக்கின்றனர், இதனுல் பலருடைய தூக்கங்கெட்டு உடல் நலச் சிதை வேற்படுகிறது. மதப்பிரசாரத்தின் பெயரைச்சொல்லிப் பலர் இத்தொல்லைதரும்வேலையிலிறஙகிவிட்டிருககின்றனர். நகர அதிகாரிகள் இனியேனும இத்தொல்லையை ஒழித்துக்கட்ட லூதியானு நீதிபதியின் நல்ல முறையைககையாள வேண்டுகிருேம்.

## மகாராஜாதி ராஜாக்கள் மக்களோடு மக்களாயினர்

### 33 உல்லாசபுரியினருக்கு ஓலை

1949 செப்டம்பர் 7-ஆம் தேதியன்று சென்னை அரசாங்கம், இதுவரை உல்லாசபுரியினராக இருந்துவந்த 33 ராஜாதி ராஜன்களைப் பதவியிலிருந்து நீக்கி அவர்களுடைய சமஸதானஙகளைத் தன் நிர்வாகத்தில் எற்றுக்கொணடது. குடிகளுக்கு ரயத்துவாரி பட்டாக்கள் தரப்படும். ரயத்வாரி முறைப்படி நிலப்பிரிவினை ஆனபிறகு இந்த "முடிதுறந்த" மன்னர்களுக்கு 15¾ கோடி ரூபாய் வரையில் நஷ்டஈடாகத் தரப்படும் எனத் தெரிகிறது. இதுவரை அவர்கள செய்துவந்துள்ள நல்ல வேலைகளுக்குச் சன்மானமாக இந்தத் தொகை தரப்படுகிறது போலும்!

## மற்ருெரு 'பெரியார்' கிளம்புகிருர்!

4—9—49ல்பொன்னேரியில், 50 வயதான ஒருவருக்கும் 10வயதான பெண்ணுக்கும் நடைபெற இருந்த திருமணம் நின்றுவிட்டதாகத் தெரியவருகிறது. பிள்ளைக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் 40 வயதுதானா! பெண்வீட்டைச் சேர்ந்த சிலா எதிர்த்தார்களாம். பெண்ணை கலயாணத்தை விரும்பவில்லையாம். அந்தப் பெண் அவரோடு ஐந்தாறு ஆண்டுகள் பழகியிருந்தால மன ஒற்றுமை ஏற்பட்டிருக்குமோ என்னவோ! அதை, அவர்கள் சொந்த விஷயம் என்று, பெதுகாய்க்கன்பேட்டை லிபர் சங்கத்தார் சும்மா இருந்துவிடவில்லையாம். பெண் இருக்கும் இடம் கண்டுபிடித்து, அப்பெண்ணின் இசைவுடன் அவளை யாறு அவ்வை ஆச்சிரமத்தில், அப்பெண்ணைக் கொண்டுபோய்ச் சேர்த்தார்களாம். திருமணம் தடைப்பட்டுவிட்டதாம.

அந்த 50 வயதான பெரியவர் வாழ்க்கைத் துணைநலம் தேடினுரோ, என்னவோ! அவர் அப்படியே தேடிக கொண்டிருந்தாலும், அதற்காக ஒரு ஏற்பாடு என்று திருமணம் செய்துகொண்டிருந்தாலும், அரசாங்கம் அது அவாகள சொந்த விஷயம் என்று சும்மாவா இருந்துவிடும்! அரசாங்கம் 'குறுகிய மனப்பான்மை' கொண்டு சொந்த விஷயத்தில், வயதைக் காரணமாகக் காட்டி, சட்டத்தின் மூலம் தலையிடுகிறதே! இந்தக் 'குறுகிய மனப்பான்மை' என்று ஒழியுமோ என்று கவலைப்படுகின்றனர் சிலர்! மணமகனுக்கும், மணமகளுககும் இருபது வயதுக்கு மேல் வித்தியாசம் இருக்கக்கூடாது, என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டாலும், அரசாங்கம் சொந்த விஷயத்தில் குறுக்கிடுவதாக அவாகள் கூறினுலும் கூறுவா! அத்தகையோர 'முட்டாள் பட்டியலில்' சேர்ந்தவராக இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

## டாலர் வலை வீச்சு

கமயூனிஸ்ட் அகிலத்தில் சேர்ந்திருந்த யூகோவுக்கு 2½ கோடி டாலரைக கொடுத்துத் தனக்கு கட்பாக்கிக் கொள்ள அமெரிக்கா டாலர் வலையை வீசியுள்ளது. கம்யூனிஸ்ட்டு அகிலத்தின் பொருளாதார முற்றுகையைச்சமாளிப்பதற்கு இந்த டாலர் வலையில் யூகோ சிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா யூகோவை அணைத்துக் கொள்கிறது! காரணம் யூகோவின் மீதிருக்கும் அளவு கடந்த அன்பு அல்ல, கம்யூனிஸ்ட் அகிலத்திடம் கொண்டிருககும் அசசமேயாகும். டாலர் வலையில் இன்னும் எத்தனை நாடுகள் விழ ஆசைபடுகின்றனவோ தெரியவில்லை! கடைசியில் அமெரிக்காவால் சில நாட்டப் படுவது அன்பாக இருக்க முடியாது, ஆதிக்க வெறியாகத்தான் இருக்கும்!

# வீரன் கோட்டையில் வருணாஸ்ரமும்-வஞ்சகமும்!

"நாடு குட்டிச்சுவராகப் போனால் என்ன? நாட்டு மக்களின் வாழ்வு சூறையாடப்பட்டால் என்ன? தன் இனத்தின் வாழ்விற்கு மட்டும் ஆபத்து வராமல் இருந்தால் போதும்!"

"வீரம் வீழ்ந்தால் என்ன? சதிவென்றால் என்ன? நாடு விடுதலைபெற்றால் என்ன? பிறர் பிடியில் சிக்கினால் என்ன? எது எக்கேடு கெட்டாலும் தம் இனத்தின் வாழ்வை மட்டும் கெடாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதுதான் முக்கியம்!"

"போருக்குப் புறப்படும் வீரனும் அந்த இனத்தின் பாதத்தில வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றாகவேண்டும். வேறு எவன் வெற்றிபெற்றுத் திரும்பினாலும், முடிபுனையும் முன்னர், அந்த இனத்தின் அனுமதிபெற்றுத்தான் ஆகவேண்டும். எனவே அந்த இனத்துக்கு, நாடு அடிமையாவதும் சுதந்திரத்தோடு இருப்பதும் ஒன்றுதான்!"

"ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு, அந்தநாட்டை ஆளும் உரிமை இருந்தாக வேண்டும் என்பது இயல்பாக எழும் எண்ணம். அவசியம் இருக்கும் வேளையில், அதற்கான தொண்டுசெய்ய மக்கள்கிளர்ந்து எழுவர்-அவர்களை நடத்திச் செல்ல வீரர்கள் தோன்றுவர்."

"பொதுவாக எதிலும், குறிப்பாகக் காதலில் தோல்வி ஏற்படுமேயானால், கெடுமதி கொள்வர். சதி செயல் புரியவும் பின் வாங்கார்."

"பழிவாங்கும் நோக்கத்தோடு, சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் அரசியல் கைதிகளை நடத்தக் கூடாது — அது அதர்மம்."

இந்த வாசகங்களின் உண்மைகளை உணர்ந்து கொள்ளவேண்டுமானால்; ஒரு முறை அல்ல பல முறை, நுணுகிப்பாருங்கள், படியுங்கள், மராட்டிய வீரன் சிவாஜியின் வரலாற்றை-படிக்க முடியாதவர்கள், சிவாஜியை நேரில் சென்று காணுங்கள், கண்டு தெளிவு பெறுங்கள். சென்னைக்கு "சிவாஜி" வரவழைக்கப்பட்டிருக்கிறார் ஒற்றைவாடை நாடக அரங்கிற்கு.

தோழர் **பகவதி** சிவாஜியாக நடிக்கிறார்; வீரம்-விவேகம்-நீதியின் லட்சணம்-நேர்மை-திறம் முதலிய பண்புகளோடு காட்சியளிக்கிறார் சிவாஜி. எதிரியாயினும் வீரத்தை மதித்து நடக்கும் பண்பும் பகைவர்களையும் தமபக்கம் இழுக்கும் சாவன்மையும் கொண்டவராக சிவாஜி சித்திரிக்கப்பட்டிருக்கிறார். தோழர் பகவதியிடம் நாம் காணும் சிவாஜி, வீர சிவாஜியாக இருக்கிறார் என்பதைக் காட்டிலும், விவேகமுள்ள சிவாஜியாக இருக்கிறார் என்பதுதான பொருத்தமுடையதாக இருக்கிறது.

ஜெயவந்தராவாக நடிக்கும் தோழர் **சண்முகம்**, வாள் பிடித்திருந்தபோதும், வஞ்சிக்கொடியைப் பற்றி இருந்தபோதும், நிலைமைக் கேற்ப நன்கு நடித்திருக்கிறார்.

ஜெகவ்தேவ்ராவாக நடிக்கும் தோழர், ஆரம்பம் முதல் முடிவு வரை, பிடிவாத குணம், முகத்தில் தொப்பளிக்க, நடித்திருக்கிறார்.

விஸ்வாசாக நடித்த சிறுவன், அவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதைப் பிறர் நம்பும் முறையில, மிகவும் பொருத்தமாக நடிக்கிறான்.

யமாஜிராவாக நடிக்கும் தோழரும், தன பாத்திரத்தைநன்குநடித்திருக்கிறார். வீர சிவாஜின் தளபதிகளின் நிலையில் இருக்கிற ஒருவரை இந்த அளவிற்குக் கேலிச்சித்திரமாகத் தீட்டியிருப்பது பொருத்தமானதுதானா என்று சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். அவரின், இரு பாதுகாவலர்களாக நடிக்கும் 'குண்டர்கள்' தங்களுடைய சிரிக்கவைக்கும் பகுதியைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால், நாடகப்போக்கில் மக்களுக்கு சோர்வு தட்டிவிடுமா என்று பார்க்கவேண்டியது அவசியம்.

சிவாஜியில், பொதுவாகவே அனைவரின் நடிப்பும் நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிடுவது மட்டும் போதாது. தோழியர் **திரௌபதி**, ஒவ்வொரு கட்டத்திலும, ஏற்படும் சந்தர்ப்பங்களை, விளக்கமாகத் தெரிவிக்கும் முறையில், தனது முகபாவத்தாலும், ஏற்ற உணர்ச்சிகளோடு சேர்த்துப் பேசுவதாலும், புகழுக்குரியவராகிறார். சிவாஜி நாடகவிறுவிறுப்புக்கு, தோழியர் திரௌபதியின் நடிப்பும் பேச்சும் பெருந்துணை செய்கிறது.

— 'பொருநன்' —

## கோயிலைப்புதுப்பிக்க 34 லட்சம் ரூபாய்

### பட்டினி தீர்க்கப் பணமில்லை

ஆப்கானியப் படை யெடுப்பின் போது அழிக்கப்பட்டுப் போன சோமநாத புரம் கோயிலைப் புதுபிக்க ரூ. 34லட்சம் செலவிடமுடிவு செய்யப்பட்டிருக்கிறது. இத் திருப்பணியில் திரு. கே. எம். முன்ஷி (பம்பாய் மாகாணப் பிரபல காங்கிரஸ் வாதி-கல்வி மந்திரி) தலைமையிடம் பெற்றுள்ளார். மக்களின் பட்டினிப் பிணியைபோக்கும் வழிகாணப் பணமில்லை. அத்தொண்டில் ஈடுபட இத்தலைவர்களுக்கு மனமில்லை. ஆனால் புதுப்பிக்கும் கோயில் விக்கிரகத்தைக் கருப்புப்பளிங்குக் கல்லில் செதுக்குவதா? வெள்ளைக் கல்லில் செதுக்குவதா கோபுரத்தை உயர்த்திக்கட்டுவதா? குட்டையாக்குவதா? கடவுளை ஏழையாக்கிவிடாமல்அவர் பெயருக்கு எத்தனை காணி நிலங்களை வாங்கிவிடுவது என்பன போன்றயோசனையில் முன்ஷி போன்ற இந்தப்பெரும் காங்கிரஸ் தலைவர்கள் இறங்கியிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களை தளபதிகளாக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தின் முதலமைச்சர் தான் இந்தியாவில் மதச்சார்பற்ற ஆட்சி நடப்பதாகப் பேசுகிறார்.

# அங்கும் இங்கும்

போலந்து நாட்டைச்சேர்ந்த இரு இளைஞர்கள் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக, மீன் தோலிலிருந்து தொப்பிகள், கையுறைகள், பாதரட்சைகள் முதலிய பொருள்களைச் செய்ய முடியும் என்பதைக்கண்டு பிடித்திருக்கிறார்களாம். ஸர்மே என்ற இடத்திலுள்ள ஒரு குதிரை லாயத்தை இவர்கள் தங்கள் தொழிற்சாலையாக மாற்றிக்கொண்டுள்ளனராம். இங்கிலாந்திலுள்ள பெரிய பெரிய மீன் பிடிக்கும் துறைமுகங்களிலிருந்து, பலரக மீன்கள் இவர்களது சிறிய தொழிற்சாலைக்கு அனுப்பப் படுகின்றனவாம். இது அங்கு!

இங்கு! தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களில், பிரதானமாய் விளங்குவதும், 'முக்கிய' ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ளதுமான வைத்திநாதசாமி, முத்துக்குமாரசாமி ஆலயங்களுக்கு ஆதீன கர்த்தா 14-4-49ல் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடத்த விளம்பரம் செய்துள்ளார். தமிழகத்தின் பல பாகங்களிலிருந்து கும்பாபிஷேகத்தைச் சேவிக்க ஏராளமான மக்களை எதிர்பார்க்கிறாராம்!

அங்கு இரு இளைஞரின் முயற்சி நாட்டுக்குப் பயன்படுகிறது. இங்கு ஆதீனகர்த்தாவால செய்யப்படும் காரியத்தால் நாட்டிற்கு ஏதாவது நன்மையுண்டா? இதனால் காலரா போய்விடுமா? பிளேக் நின்றுவிடுமா? சாவு குறைந்துவிடுமா? கஷ்டம் தீர்ந்துவிடுமா? நேரம், நினைப்பு, உழைப்பு, ஆற்றல் எல்லாம் ஆதீன கர்த்தாவால் இங்கு பாழ்படுத்தப்படுகிறது. இவர் செய்யும் காரியம் இவருக்கு ஒரு நாள் பொழுது போக்கு நாட்டிற்கு நஷ்டம்; அங்கு நடக்கும் இருவரின் முயற்சி அவர்களுக்கும் நன்மை தரக் கூடியது; நாட்டிற்கும் நன்மை பயக்கக் கூடியது!

## வயிற்றுக்குப் போதவில்லையே

---என். ஜி. ஓ.

## கையில் பணமில்லையே

---பிரதமர்

விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதால், அலவன்ஸ் தொகையை இன்னும் சற்று அதிகப்படுத்த வேண்டுமென்று அரசாங்கக் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் சென்னை முதலமைச்சரைப் பேட்டி கண்டு தெரிவித்துக்கொண்டனர். இவர்கள் கூறிய குறையனைத்தையும் கேட்டுக் கொண்ட முதலமைச்சர், இவர்களுடைய குறைகளுக்குத்தாம் அனுதாபப் படுவதாகவும் ஆனால் அரசாங்கத்தின் நிதி நிலைமை தான் உதவி செய்யவிடாமல் குறுக்கே நிற்கிறதென்றும் பதில் கூறினார். ஏழைகளின் நெருக்கடியில்தானா அரசாங்க நிதி நிலைமை குறுக்கிட வேண்டும்? மந்திரிகளின் சுற்றுப் பிரயாணங்களுக்கு இடமளித்து வரும நிதி நிலைமை இதற்கிடந்தர மறுப்பதும் ஒரு விந்தைதான்.

## என்ஜின்கள் இறக்குமதி

### தக்ளி ஏற்றுமதிக்கு வழி!

இந்தியாவிற்கு, அமெரிக்காவிலிருந்து 128 ரயில் என்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன. மாண்ட்ரீலிலிருந்தும், நீயூயார்க்கிலிருந்தும் அவைகள் இங்கு வருகின்றன. இப்பொழுது அவைகளில் 36 என்ஜின்கள்வருகின்றன

குடிசைத் தொழிலையும கதரையும் வளர்க்கும சர்க்கார் தான் அமெரிக்க என்ஜின்களை வரவழைக்கிறது. என்ஜின்களை வரவழைப்பதிலே, இயந்திரத் தொழிலை ஆதரிப்பவர்களுக்கு வருத்தம இருக்க வழி கிடையாது. ஆனால், குடிசைத்தொழிலையே('தொலையுகள்', என்று கூட அல்ல) ஆதரிக்கும் காங்கிரஸ் சர்க்கார் என்ஜின்களை வரவழைக்கலாமா? குடிசைத் தொழிலுக்குத் துரோகம புரியலாமா!

காந்தியாரின்பெயரைச்சேர்த்து, மகாமகத்துவம் பொதிந்ததாகப் பேசப்படும தக்ளியும், கைராட்டையும் இறக்குமதி செய்ய வேறு நாடுகள் ஏனோ முன்வரவில்லை! அவைகளின் மகத்துவத்தை அயல் நாடுகளில் விரித்துரைக்க, சர்தார் வேதாத்தினத்தை அங்கெல்லாம் அனுப்பிவைப்பது நல்லது! அதன் காரணமாக, ஏற்றுமதியில்லாத தக்ளிகளுக்கு, ஏற்றுமதி 'யோகமாவது' கிடைக்கட்டும்!

## இனி நடப்பவை

சென்னை—தோழர்கள் ப. மா. பலவேசமுத்து — பாக்கியலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, 11—9—49 ஞாயிறு காலை 8 30 மணிக்கு, பழைய வண்ணாரப் பேட்டை, 39, மணிகண்ட முதலி 1வது தெரு தோழர் எஸ். ஆர். சண்முகம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். தோழர் வி. வி. மாணிக்கவாசகம், என்.பி. கோவிந்தசாமி, பி. ராமசாமி ஆகியோர் பேசுவார்கள். மாலை திருமணத்தை ஒட்டிப்பாராட்டுக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

திருமணம்: சென்னை, பெத்து நாய்க்கன் பேட்டை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்தெரு, 28. வது எண்ணுள்ள நடராஜ திருமணக் கூடத்தில் தோழியர் தனலட்சுமிக்கும்-தோழர் K. லட்சுமணனுக்கும் திருமணம். 15-9-49, வியாழன் அன்று நடைபெறும்.

## ஏஜெண்டுகளுக்கு

அதிகப்படி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம் அனுப்பினாலன்றி கவனிக்கப்பட மாட்டாது.

—"நிர்வாகி"

# மற்றவர்களைப் பற்றிக் கவலை இல்லை!

## அதுவே போதுமாம்!

சௌராஷ்டிர யூனியன் சர்க்கார் சௌராஷ்டிராவிலுள்ள பள்ளிக்கூடங்களில், குறைந்த பட்சம ஒரு தேசியக் கொடியும், காந்தியார் படமும வைத்துக் கொள்ள வேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்குப் போதிய இடவசதி இருக்கிறதா, ஏழைப் பிள்ளைகள் இலவசமாகப் படிப்பதற்கு வசதி இருக்கிறதா, ஆசிரியர்களின் சம்பளம அவர்கள் குடும்ப நிலைக்குப் போதுமா என்பவையலல சௌராஷ்டிர சர்க்காரின் கவலை இவைகள் குறைந்தபட்சத் தேவைகளாகக்கூடக் கருதப்படவில்லை. பள்ளிக்கூடங்களுக்குக் குறைந்தபட்சத் தேவைகளாக அந்த அரசாங்கம் கருதியிருப்பன ஒரு தேசியக் கொடி—ஒரு காந்தியார் படம்! எவ்வளவு அவசியமான-அவசரமான தேவை பாருங்கள்!

அந்தக் குறைந்தபட்சத் தேவைகளையாவது அந்த அரசாங்கம செய்ய முற்படுகிறதா? அப்படியிருந்தால்தான், 'தானம கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே' என்ற பழமொழிப்படி கிடைத்தவரையில் லாபம் என்று விட்டிருக்கலாமே! அந்த அளவு உதவியைத்தான் காங்கிரஸ் தன்மை கொண்ட ஒரு அரசாங்கத்திடம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அந்தத்தேவைகளைக்கூட நிறைவேறிக் கொள்ளப் பள்ளிக்கூடங்கள் பொதுமக்களையும், கிராமச்சபைகளையும் எதிர்பார்க்க வேண்டுமாம்! எப்படி ஆலோசனை? அழகாய்த்தானே இருக்கிறது!

## முக்கிய அறிவிப்பு

கழக சம்பந்தமான அலுவல்களைப்பற்றிக் கலந்து பேச விரும்புவோர், மாலை 4-மணியிலிருந்து 6-மணிக்குள்ளாக, கழக அலுவலகக் கட்டிடத்தில் (7, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை) வந்து அலுவலகப் பொறுப்பாளரைக் கண்டு பேசலாம்.

—ஆசிரியர்.

### மீஞ்சூர் திராவிடர் கழகம்

மீஞ்சூர், ஆக. 29—

இன்று மாலை 5 மணிக்கு மீஞ்சூர் திராவிடர் கழகத்தின் ஆய்வுக்குழு அங்கத்தினர்கள் கூட்டம தோழர் சத்ரு: சிங்கார வேலனார் தலைமையின் கீழ் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றின.

1) பகுத்தறிவியக்கத்தின் தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தனது 72-ம் ஆண்டில் 30 ஆண்டுகள் நிரம்பப் பெறாத மகள் மணியம்மையை மணந்து கொண்டதன் மூலம் இயக்கலட்சியத்தினின்றும் வழுக்கிவிட்டார். காதலினும் பெரிது கடமை. தலைமையினும் பெரிது குறிக்கோள். ஆகையால் நமது குறிக்கோள் குன்றுதிருந்தலின் பொருட்டு, வழுக்கிய தலைவரை விலக்கவேண்டும என்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2) இலட்சியத்திற்காக உழைத்து ஆயிரமாயிரம் இளங்காளைகளை இயக்கப்பணியில் ஈர்த்த எழு அண்ணாவை இழிமொழிகொண்டு தூற்றியதையும், சதிகார கும்பலென்று பழிசுமத்தியதையும் விளக்கம் என்னும பெயரால் அவர் விடுதலையில் தீட்டிய குழப்பத்தையும் இக்கூட்டம் கண்டிக்கிறது.

3) இயக்கப்பணியை இறுதி மூச்சு என்றுள்ள இலட்சியவாதிகளை ஒன்று கூட்டி, தகுந்த தலைவரை ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுத்து, நாம் எம இலட்சியப் பாதையில்தொடர்ந்து முன்செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று அறிஞர் அண்ணாவை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது எனச்செயலாளர் தோழர் ஒளியன் எழுதுகிறார்.

கம்பம், செப். 3—

மதுரை மாவட்டம் கம்பம் திராவிடர் கழக வளர்ச்சிக்காக, எவ்வித எதிர்ப்புக்கும அஞ்சாமல், உழைத்து வந்தவரான தோழர் அய்யா இயற்கை எய்தியமை குறித்து, அன்னார் மறைவுக்கு வருந்தி, அன்னார் குடும்பத்தினர்க்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைக் கம்பம் திராவிடர்கழகம் தெரிவித்துக் கொள்வதாகத் தலைவர் தோழர் எஸ். கருணியாண்டி தெரிவிக்கிறார்.

# மனு சாஸ்திரியும் மலான்...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

எல்லா வியாபாரத் துறைகளிலும் போட்டியிடவுமான நிலை தென் ஆப்ரிக்காவில் ஏற்பட்டு வருகிறது. நாளாக நாளாக அந்தப் போட்டிவளர்ந்து வருகிறது. வெளிப்படையாக இதனைக்கூறி பரிகாரம் தேடமுடியாத நிர்பந்தம் மலானுக்கு இருக்கிறது. எனவே, இதனை மனத்துக்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டு, மனுசாஸ்திரியார் போதனைப்படி நடப்பது என, மலான் தீர்மானித்துவிட்டிருக்கிறார். வெள்ளைநிற மலான் மனு சாஸ்திரி யாகிறார். சதுர்மறை கற்காதவர்! இருந்தாலும் அதன் சாரத்தை நடை முறையில் நன்கு கையாளுகிறார் மலான். சனாதனப் பாகுபாடு அறியார்! இருந்தாலும் சனாதனப் பிரிவை அமுல் நடத்தி வருகிறார். மனு சாஸ்திரியின் நீதிமுறைகளைத் தெரியார்! இருந்தாலும், அதனினும் கொடிய சட்டங்களை இயற்றி நடைமுறைக்குக் கொண்டுவருகிறார். மனு சாஸ்திரியார் வாழ்ந்த சட்டம் இயற்றியது அந்தக் காலத்தில். ஆனால் மலான் சாஸ்திரியார் சட்டமியற்றி சங்கடம் ஏற்படுத்துவது இந்தக் காலத்தில்.

பிறப்பிலே ஜாதி பேசினார் மனு சாஸ்திரியார்! நிறத்திலே உயர்வுதாழ்வு பேசுகிறார் மலான் சாஸ்திரியார்! ஒரு ஜாதியின் உயர்வுக்கும், வாழ்வு வளத்திற்கும் விதிகள் செய்து மகிழ்ந்தார் மனு சாஸ்திரியார்! வெள்ளையர்கள் வாழ்வை வளமாக்கவே விதிகள் செய்து மகிழ்கிறார் மலான் சாஸ்திரியார்! ஒரு ஜாதியினர் உழைக்காமல் போகபோக்கியத்தோடு இருப்பதற்கே, இயற்றிவைத்தார் அக்கிரம ஏற்பாட்டை மனு சாஸ்திரியார்! அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றி, வெள்ளையரின் போக போக்கியத்திற்கு ஏற்படும் போட்டியைச் சமாளிக்கவே, ஏற்பாடுகள் செய்துவருகிறார் மலான் சாஸ்திரியார்! மனு சாஸ்திரியார் மீண்டும் அவதாரம் எடுத்திருக்கிறார்; ஆப்பிரிக்க நாட்டிலே மலான் சாஸ்திரியாக!

மனுவின் தொல்லைத் தாங்க முடியாமல், பிறந்த நாட்டில் தாழ்ந்த ஜாதி என்று உடன் பிறந்தவர்கள் இழித்துப் பேசினதைப் பொறுக்க முடியாமல்; தென் ஆப்ரிக்காவிற்குக் கூலிகளாகக் கடல் கடந்து சென்றனர் இந்நாட்டு மக்கள். கூலி என்ற நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறிவரும் வேளையில், பிறந்த நாட்டில எழுந்தப் பழிச்சொல் உண்டாக்கிய மனப் புண் சிறிது சிறிதாக ஆறிவரும் வேளையில், மனு சாஸ்திரியாரை மீண்டும் காணநேரும், கடல் கடந்த மக்களுக்கு, எப்படி இருக்கும் உள்ளம்? தாய்நாட்டைத் துறந்து வந்தாலும், போகும் இடத்திலும் இழிவு நீங்கிவாழவிடாமல், மனுசாஸ்திரியார் துரத்தி வந்திருப்பதைக் காணும் நம்மவர் நெஞ்சம் என்ன பாடுபடும்?

பூணூல் இல்லை- உச்சிக்குடுமி இல்லை- போகதண்டமில்லை- கமண்டலமில்லை—காய்ந்த புல் இல்லை—மான் உரி இல்லை—புலித்தோல் இல்லை — முணுமுணுக்கும் மந்திரங்கள் இல்லை! இருந்தாலும் மனு சாஸ்திரியாரின் பண்பு—மனவளம்—கொடும் உள்ளம் மட்டும் தென் ஆப்ரிக்காவில் உலாவுகிறது! வெள்ளை நிறம் கருப்பு நிறம் என்ற பொருந்தா வாதத்தைக் கிளப்பி, வெள்ளையர்களுக்குச் சலுகைத்தேடி, மற்றவர்களுக்குக் கேடு செய்கிறார், மலான் சாஸ்திரி-மனு சாஸ்திரியின் பிரதம மாணவர்!

'பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர' என்னும் மனுகண்ட ஜாதிப்பிரிவினைகளை, நிறத்தை முன்தள்ளி 'ஐரோப்பியர், நாட்டுமக்கள், கலப்பு, இந்தியர்' என்ற நான்கு பிரிவுகளையும் உறுதிப்படுத்தப் போகிறார் மலான் சாஸ்திரி! தென் ஆப்ரிக்காவிலுள்ள ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை ஒன்று வழங்கப்போகிறாராம். அதிலே அவரவர்கள் நிறப்பண்பும் குறிப்பிடப்படுமாம். இருவர் போக்கிலும் ஓரே உணர்ச்சி, உழைக்காமல் பிறரை வஞ்சித்து வாழ்வதும், இழிவு படுத்துவதுமான உணர்ச்சி, அடங்கி இருக்கிறது என்பதில் சந்தேகமென்ன?

கேப்டவுன், விட்வாடர்ஸ்ராண்ட் முதலிய பல்கலைக் கழகங்களில் ஐரோப்பிய மாணவர்களோடு, மற்ற மாணவர்களும் சேர்ந்து கல்வி பயிலுவதால் கலாசாரம் பாழாகிவிடுகிறதாம்! அதனைத் தடுக்க முடிவுக்கு வந்துவிட்டார் மலான் சாஸ்திரி. மனு சாஸ்திரியின் போதனைப்படி, பார்ப்பன மாணவர்களும், மற்ற மாணவர்களும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டால் ஆச்சாரம் கெட்டுவிடும் என்றும், மாணவர்கள் ஒக்க இருந்து உண்பதைத்தடுக்கவேண்டுமென்றும், இங்கு, இன்றும் நடக்கும் கிளர்ச்சியுடன், மலான் சாஸ்திரியின் நடத்தையையும் ஒத்திட்டுப் பார்க்க வேண்டுகிறோம்.

மணமுறையில், மனுசாஸ்திரியாரை மீறுகிறார் மலான் சாஸ்திரியார். இருவர் உள்நோக்கமும் ஒன்றுதான்! உணர்ச்சியும் ஒன்றுதான்! காலந்தான் வெவ்வேறு! நாடுதான் இரண்டு! ஆள் மாறாட்டமேயன்றி, அடிப்படையில் மாறுதல் இல்லை. இரண்டு பேர் செயலும் தொலைந்தாக வேண்டும்.

மனுசாஸ்திரியாரைப் போற்றி மலான் சாஸ்திரியாரை மட்டும் கண்டிக்க முன்வருபவர்கள் வஞ்சகர்கள். தான் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று வாதிடும் புல்லர்கள். கால வேகத்தை அறிந்து, மக்களை மதித்து நடக்கும் பண்புபெற வேண்டும் இரு சாராரும்.

---

## எதிர்கால வேலைத்திட்ட அமைப்புக் கூட்டம்

திராவிடர் கழகத் தோழர்களின் எதிர்கால வேலைத் திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம், 17—9—49 சனிக்கிழமை காலை 10-மணிக்கு, சென்னை பவழக்காரத் தெரு, 7-ம் எண் இல்லத்தில் நடைபெறும்.

பெரியார் போக்கினைக் கண்டித்துக் கருத்துரை வழங்கியுள்ள, திராவிடர் கழக மத்ய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் கூடிக் கலந்து பேசி, எதிர்கால வேலைத்திட்டம் பற்றி முடிவு செய்வர்.

சி. என். அண்ணாதுரை.

---

## பம்பரஞ்சுத்தி திராவிடர் கழகம்

பம்பரஞ்சுத்தி, செ. 5—

லால்குடி வட்டம், பம்பரஞ்சுத்தி கிராமம் திராவிடர் கழகம் 3—9—49.ம்நாள் தலைவர் ஏ. அருணப்பன் தலைமையில் கூடியது. கீழ்கண்ட தீர்மானம் ஏகோபித்து நிறைவேறியது.

பெரியார் தனது தள்ளாத 72-வது வயதில் திருமணம்செய்து கொண்டது கழக வளர்ச்சியில் தடங்கல் ஏற்பட்டிருப்பதால் மாகாண நிர்வாகக் கமிட்டியார் விரைவில் கூடி கழக எதிர்கால வேலைகளைத் துவக்க வேண்டுமென்றும் அதுவரையில் பெரியார் தலைமையினின்று விலகி இருப்பது என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. எனச் செயலாளர் தோழர் சபாஸ்டியன் எழுதுகிறார்.

---

## ஆசிரியருக்கு முடங்கல்

### கேட்டது கல்வி! கிடைப்பது அவமானம்!

ஐயா!

நாங்கள் திருப்பதியில் தமிழ் வித்வான் வகுப்புக்காக பயிலுகின்றோம். நாங்கள் பொது உணவு விடுதியில் (Commonmess) உணவு அருந்தி வருகிறோம். எங்களுடன் தெலுங்கு சமஸ்கிருதம், ஹிந்தி முதலியவைகள் பயிலும் மாணவர்கள் உள்ளார்கள். சென்றவாரம் 'மாலைமணி'யில் எங்கள் கல்லூரியைப் பற்றித் தாங்கள் தீட்டிய கட்டுரைகண்டு மகிழ்ந்தோம். இவ்வாண்டு சமஸ்கிருதம் பயில மாணவர்கள் வாரதகுறையால் கல்லூரித் தலைவர் (Principal) பிராமணா. கல்லூரிப் பொது உணவுவிடுதியைஒழிக்கச்சதிசெய்து வருகிறார். அன்றியும் உணவு[illegible] மேற்பார்வையாளரும் (Warden) பார்ப்பனா. தங்கள் கட்டுரையைக் கண்டபிறகு கல்லூரித்தலைவருக்குக் கோபம் வந்துவிட்டது. அதனால் உணவில் வண்டு புழு முதலியவைகள் கலந்த உணவுப்பொருள்களை வாங்கி எங்களுக்குச் சுத்தம் செய்யாமல் சமைத்துப்போடுகிறார்கள். கேட்டால் தண்டச் சோற்றுக்குக் கேள்வி வேறு என்று சீறுகிறார் கல்லூரித் தலைவர். சாப்பிட்டால் சாப்பிடுங்கள் இல்லையேல் வெளியே போய்விடுங்கள் என்கிறார். ஆரிய ஆதிக்கம் ஆட்சிபுரிகிறது இக் கல்லூரியில். கல்லூரியில் சமஸ்கிருத, தெலுங்கு, தமிழ், ஹிந்தி ஆசிரியர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் (4 பேர் தவிர்த்து). பொது உணவு விடுதியைமூடும்படிசெய்துவிட்டால் அனைவருக்கும் உதவிப் பணம் (Stipend) தர ஏற்பாடுசெய்துவிட்டால் சனாதனம் வளரும் என்பதற்காகவேலைசெய்துவருகிறார், கல்லூரித் தலைவரும், வார்டனும். மாணவர்கள் பெரும்பாலும் ஏழைகள். ஏழைகளுக்கு உதவிசெய்து நாட்டுமொழிகளை வளர்க்கும்வகையில் பணத்தைச் செலவிடுகின்றதில், பெருச்சாளிகள் இப்படிப்பட்ட வேலைகளைச்செய்கின்றனர்! மாணவர்கள் 200, 300 மைல்களுக்கப்பாலிருந்தும் வந்து படிக்கிறார்கள். மாணவர்கள் உடல்நலம் குன்றியிருந்தால் கவனிப்பதற்கு வெங்கடேஸ்வரனாலும் முடியவில்லை! தாசர்கள் என்ன செய்யப்போகிறார்கள்! கல்லூரியில் குளிக்க ஒரு கிணறு. கிணற்றில் ஒருவாரமாகக் கயிறும் பக்கெட்டும் கிடையாது. மாணவர்கள் தண்ணீர்குடிக்கத் தெருவிலுள்ள குழாய்களில்தான் குடிக்கவேண்டும். இரவில் தண்ணீருக்குக் கண்ணீர்விடவேண்டியதுதான். வார்டனைக்கேட்டால் வாய்ப்பூட்டுச் சட்டம். கல்லூரித்தலைவராகிய பார்ப்பனரைக் கேட்டால் தண்டச் சோறு என்கிறார். உள்ளம் கொதிக்கிறது. இந்நிலையில் கல்லூரி ஒன்று நடப்பதைவிட அதை மூடிவிடுவதேமேல். தேவஸ்தானகமிட்டி ஏதேதோதான் செய்கிறது. எங்கள் நிலையைக்கான அமைக்கவும் அவர்கள் வருவதில்லை. நாங்கள் "வெங்கடேசப்பெருமாளின்" சொத்தில் சாப்பிட்டுவருகிறோம். பிரின்சிபால் 'வெங்கடேசப்பெருமாளின்'..............பிள்ளை மாதிரி தண்டச்சோறு என்று கூறுகிறார். என்று கிடைக்குமோ எங்களுக்கு நல்வாழ்வு என்று ஏங்கிக்கிடக்கின்றோம். கமிட்டி ஹாஸ்டல் செலவுக்காக 26 ஆயிரம் ரூபாய் ஆண்டுதோறும் பட்ஜெட்டில்ஒதுக்கி வைக்கிறது. மாணவர்கள் தொகை 130. பேர் கல்லூரித் தலைவர் சிக்கனச் செலவு செய்துவருகிறார் போலும், தம் பதவி நீடிக்க! (காரணம் அவர் 60 வயதுக் கிழவர். பார்ப்பனர் ஆதலால் பதவியில் இருக்கிறார்) சமையல்காரர்களும் பார்ப்பனர்கள்! நாங்கள் கேட்டது கல்வி! கிடைப்பது அவமானம்!

திருப்பதி, 5-9-49. } "அல்லலுறுவோர்"

---

## ஈ. வெ. ரா. — மணி அம்மை வழக்கு

சென்னை, அக். 8—

இன்று காலை 11-மணிக்கு சென்னை எழும்பூர் 6-வது மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆரம்பமாயிற்று. கோர்ட்டுக்கு ஈ.வெ.ரா. —மணியம்மை ஆகிய இருவரும் வரவில்லை. அவர்களுடைய வக்கீல் இருவர் சார்பாகவும் ஆஜராகி ஈ. வெ. ரா. வயதானவராதலால் கோர்ட்டுக்கு அடிக்கடி வரமுடியவில்லையென்றும், மணி அம்மை ஈ. வெ. ரா. மனைவி யென்றும் ஆகவே இருவரும் கோர்ட்டுக்கு வாரமலே வழக்கு நடக்க அனுமதிக்கவேண்டுமென்றும் கேட்டுக்[illegible]டார். ஈ. வெ. ரா. வின் மனுவை மட்டும் ஒப்புக்கொண்டு மணி அம்மை கோர்ட்டுக்கு ஆஜராக வேண்டுமென மாஜிஸ்ட்ரேட் உத்திரவிட்டார் மணிஅம்மை அதன் பின் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார், பிறகு வழக்கு விசாரணைக்கு 28-9-49-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## வாசகர்களுக்கு

7-9-49 மாலை 6-மணிக்கு, சென்னை, மெமோரியல் மண்டபத்தில், எம். எஸ். எம். ரெயில்வே ஊழியர்கள் (என். ஜி. ஓ கிளை) வருடாந்திர மாநாட்டில் தோழர் C. N. அண்ணாதுரை அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவின் விரிவு நாளை (10-9-49) இதழில் வெளியிடப்பெறும்.

---

## வடக்கப்பட்டு விவசாயிகள் சங்[illegible]கம்

வடக்கப்பட்டு, [illegible]செப். 6

வடக்கப்பட்டு விவசாயிகள் [illegible]சங்கக் கூட்டம் 5-9-49ல்தோழர் [illegible]. என் தத்தப்பன் தலைமையில் [illegible]வசாமாகக் கூடி, கீழ்க்கண்ட தீர்மான[illegible]கள் ஏகமனதாக நிறைவேற்ற[illegible]பட்டன.

1. இம்மாகாணத்தில் பொது மக்கள் பாதுகாப்புச சட்டப்ப[illegible] நூற்றுக்கணக்கான ஆண், பெண்களை கைது செய்து விசாரணையில்லாமல் பல மாதங்களாக கால தாமதம் செய்வது ஜன நாயக சர்க்காருக்கு உகந்ததல்ல, என்று,கருதுவதுடன் விசாரணை செய்ய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது என்றும்,

2. விசாரணைஅல்லது விடுதலை செய்யுங்கள் என்றும்,

குறைந்த அளவுரூபாய் 100-0-0 பாதுகாப்புகைதிகள் குடும்பத்திற்கு சர்க்கார் அளித்தல் வேண்டும என்றும்,

4.இரவில்கொட்டடியில் விடைக்காதீர்கள் என்றும்,

5. மாகாணத்துக்கு வெளியே கைதிகளை மாற்றும் உத்திரவை ரத்து செய்து விடவேண்டும் என்றும்,

6. கைதிகளுக்குப் போதுமான வைத்திய உதவி கொடுக்கவேண்டும் என்றும்,

7. தண்டிக்கப்பட்ட அல்லது விசாரணையிலிருக்கும் தொழிற்சங்க விவசாயகம்யூனிஸ்டு இயக்கக் கைதிகளை அரசியற் கைதிகள் போல் நடத்தல் வேண்டுமாயும் அவர்களுக்கு விசேஷ வகுப்பு அளிக்க வேண்டும் என்றும்,

8. காவற்கைதிகளை அவரவர் ஜில்லா சிறைச்சாலைகளுக்கே திரும்பி அனுப்ப வேண்டுமென்றும்,

9. உடைப்படி உணவுப்படி மாதச்செலவுப்படி ஆகியவைகளை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அளித்தல்வேண்டும் என்றும்,

10. உடனடியாக பகிரங்க விசாரணை நடத்தி நாட்டின் அமைதிக்கும். பாட்டாளிகளின் துயர் நீங்கவும் சர்க்கார் நடவடிக்கை எடுக்க இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது. கூட்டம் இனிது முடிந்தது. எனச் சங்கத்தலைவர் எழுதுகிறார்.

---

"மாலை மணி"

(திராவிடர் தமிழ் தினசரி)

| | |
|---|---|
| வருட சந்தா | 15—0—0 |
| 6-மாத ,, | 7—8—0 |
| 3-மாத ,, | 3—12—0 |

மானேஜர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.